

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION
Rs.120/-



# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY

| | | | |
|---|---|---|---|
| கதிர் 51 | பாரிப்பு 5 | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜனவரி 2020 |
| KADHIR 51 | PAARIPPU 5 | THIRUVALLUVAR AANDU 2050 | JANUARY 2020 |




நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது


TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org    email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் பொதுக்குழு கூட்டத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான நாட்சுவடியை தியாகச்செம்மல் சி.ப.சண்முகம் அவர்கள் வெளியிட பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் பொதுக்குழு கூட்டத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியை முன்னாள் மாநிலத் தலைவர் ஆர்.வெங்கடசுப்பு அவர்கள் வெளியிட அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் எஸ்.சண்முகானந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.



**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 5 (2019 - 2020)



# தொடரும்

## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

பொறியாளர் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். எல்லா வளமும், நலமும் பெற வாழ்த்துகிறோம். இந்த புத்தாண்டு அனைவருக்கும் நல்ல ஆண்டாக அமையும் என்று நம்புவோம்.

செயற்பொறியாளர் பதவி உயர்வை எதிர்த்து நீதிமன்ற தடையாணை பெற்றது போலவே தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் முதுநிலை சம்பந்தமான தீர்ப்பை அமுல்படுத்த கோரி, உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலுக்கும் நீதிமன்ற தடையாணை கோரி சில தனி நபர்கள் வழக்கு தொடுத்திருந்தார்கள். அந்த வழக்கு கடந்த 05.12.2019 அன்று நீதியரசர் மாண்புமிகு ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்து 12.12.2019 அன்றைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

05.12.2019 அன்று வழக்கு விசாரணையின் போது Additional Advocate General திரு. STS மூர்த்தி அவர்கள், அடுத்த விசாரணை தேதி (12.12.2019) வரை உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்காமல், நிறுத்தி வைக்கிறோம் என்று உறுதி அளித்து விட்டு வந்திருக்கிறார்.

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் முதுநிலை சம்பந்தமாக வழக்கு தொடுத்து மறைமுகமாக இதற்கு சற்றும் பொருந்தாத, முற்றிலும் வேறு தன்மை கொண்ட, வேறு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான வழக்குகளை இதனுடன் இணைத்து விட்டார்கள்.

கடந்த 12.12.2019 அன்று நீதியரசர் மாண்புமிகு ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் முதுநிலை சம்பந்தமான வழக்குக்கும் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான மற்ற வழக்குகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. எனவே இந்த இரண்டு விதமான வழக்குகளை ஒன்றாக சேர்த்து விசாரிக்கக்கூடாது என்று நமது வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள்.

மேலும் Advocate General அவர்கள், துறையில் நிறைய உதவிசெயற்பொறியாளர் பதவிகள் காலியாக உள்ளதால் பணிகளை செய்வதில் சிக்கல் உள்ளது. எனவே விதி 47(1)ன் படி தற்காலிக உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க அனுமதிக்க வேண்டும் எனவும் வாதிட்டார்.

நீதியரசர் அவர்கள் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழக்குகள் மற்றும் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள் முதுநிலை சம்பந்தமான வழக்குகளை தனித்தனியாக பிரித்து, உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழக்குகளை ஒரு நீதிபதி உள்ள அமர்வுக்கும், முதுநிலை சம்பந்தமான வழக்குகளை இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வும் விசாரிக்க பரிந்துரைத்தார். இதற்கு மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

பிரச்சினை முடிந்து விட்டது என்று நினைத்து கொண்டிருந்த வேளையில் திடீரென இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வில் புதிய வழக்கு தொடுத்தார்கள். ஏற்கனவே ஒரு நீதிபதி அமர்வில் என்ன கேட்டார்களோ அதையே இங்கும் கேட்டு புதிய வழக்கு. கூடுதலாக விதி 47(1)ன் படி உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்குவதற்கு தடையாணை விதிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்கள்.

இந்த புத்தாண்டே நமக்கு வழக்கோடு அரம்பித்தது. 02.01.2020 அன்று தலைமை நீதிபதி அமர்வில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

03.01.2020 அன்று மாண்புமிகு தலைமை நீதிபதி அமர்வில் இந்த வழக்கின் மீது தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதியரசர் திரு.ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள் அளித்த தீர்ப்பை உறுதி செய்தது. விதி 47(1)க்கு தடையாணை விதிக்கவில்லை.

கடந்த டிசம்பர் மாதம் 3வது வாரத்தில் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டு இந்நேரம் அனைவரும் உதவிசெயற்பொறியாளர்களாக பணியில் சேர்ந்திருப்பார்கள். ஆனால் கடைசி நேரத்தில் தட்டி போய் விட்டது. அடுத்த முயற்சிகள் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. கண்டிப்பாக நல்லதே நடக்கும்.

இளம் பொறியாளர்களாக இருக்கும் போது பகுதி நேர பட்டம் பயின்று உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் பெற்றவர்களை ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து பணிவரன்முறை செய்து முன்னாள் தலைமைப் பொறியாளர் திருமாறன் உள்நோக்கத்தோடு ஆணை பிறப்பித்திருந்தார். இது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கும், விதிகளுக்கும் மாறானது. இதை மாற்றி உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி பணிவரன்முறை செய்ய அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2019 /நாள் 31.12.2019ன் படி 31.12.2019 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | R. நேசக்குமார் | 16.12.1961 | ஆட்சி அலுவலர் |
| 2. | M. ஹசீனா | 31.12.1961 | ஆட்சி அலுவலர் |
| 3. | S. முகம்மது கமால் | 07.12.1961 | இளநிலைப் பொறியாளர் |

ஒம்/- கு.இராமமூர்த்தி
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம),
தலைமைப் பொறியாளர் (பொது), பொபது

## WP.Nos.34153 and 33373 of 2019 and WP Nos.10117, 3617 & 8402 of 2017 and WP Nos.36614 & 43750 of 2016

**N.ANAND VENKATESH., J.**

This Court passed an interim order dated 05.12.2019 based on the undertaking given by the learned Additional Advocate General. Today a detailed counter affidavit has been filed by the 1st and 2nd respondents.

2.The learned Advocate General submitted that as on date, totally the sanctioned strength of Assistant Executive Engineer is 758 and there are 473 vacancies. The Government is not able to proceed further with the promotions due to the *inter se* disputes and in the meantime work has to go on in some important projects. The requirement for the Assistant Executive Engineer in those projects has also been listed in the counter affidavit. The learned Advocate General submitted that in order to tide over the situation, temporary promotion has to be made under Section 47 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016. The learned Advocate General submitted that the persons who are given temporary promotion cannot claim any seniority or claim any advantage by virtue of their names finding part in the temporary promotion list. The learned Advocate General made it clear that, this is only a temporary arrangement and depending upon the ultimate result of the Special Leave Petition to be filed before the Hon'ble Supreme Court, action will be taken.

3.The learned counsel for the petitioner submitted that the temporary promotion list that is sought to be published by the respondents consists of persons who were promoted based on roster point and which has now been struck down by the Hon'ble Division Bench. Therefore, the learned counsel submitted that by publishing a temporary promotion list, the respondents are only trying to get over the judgment of the Hon'ble Division Bench and in a way it goes against the judgment of the Hon'ble Division Bench. The learned counsel submitted that such a temporary promotion list should not be permitted to be published by the respondents.

4.The crux of the issue is whether the temporary promotion list that is now being prepared by the respondents based on the existing list available, will go against the judgment of the Hon'ble Division Bench. The Hon'ble Division

Bench has already struck down Sections 1(2), 40(1) and 70 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 as ultra vires and unconstitutional.

5.The Hon'ble Division Bench has also directed the respondents to redo the exercise of fixation of seniority within a period of 12 weeks from the date of receipt of copy of this order. The case of the petitioner is that, consequence of the declaration made by the Hon'ble Division Bench will result in considering the promotion on merits and not on roster point. The apprehension that has been raised by the petitioner is that a temporary promotion list is being prepared with persons who were earlier considered for promotion on roster point and therefore the same is in violation of the judgment of the Hon'ble Division Bench.

6.In the considered view of this Court, this issue raised by the petitioners requires consideration by the same Division Bench which had struck down the above provision. A single Judge should not be hearing this writ petition and interpreting the judgment of the Hon'ble Division Bench. Therefore, it will be fit and proper to post these writ petitions before the same Division Bench.

7.After hearing the counsel appearing in all the other writ petitions and also the learned Advocate General, this Court is also of the considered view that the other writ petitions pertaining to the years 2016 and 2017, need not to be tagged along with these writ petitions and they can be heard independently. Therefore, except W.P.Nos.34153 and 33373 of 2019, all the other writ petitions need not be tagged along with these writ petitions.

8.Registry is directed to get appropriate orders from the Hon'ble Chief Justice and post W.P.Nos.34153 and 33373 of 2019 before the Hon'ble Division Bench.

9.Registry is also directed to get appropriate orders to post WP Nos.36614 & 43750 of 2016 and WP Nos.10117, 3617 & 8402 of 2017 before this Court or any other Court, after getting appropriate orders from the Hon'ble Chief Justice.

12.12.2019

WP.Nos.34153 and 33373 of 2019
and WP Nos.10117, 3617 & 8402 of 2017
and WP Nos.36614 & 43750 of 2016

**W.P.No.35161 of 2019**

**and W.M.P.Nos.35947 and 35957 of 2019**

**THE HON'BLE CHIEF JUSTICE**

**and**

**SUBRAMONIUM PRASAD, J.**

Heard Mr.N.Subramaniyan, learned counsel for the petitioner, and Mr.Vijay Narayan, learned Advocate General appearing for the respondents as also Mr.R.Singaravelan, learned Senior Counsel who assisted the Court.

2.The challenge raised in this petition is founded on the primary issues on facts that had come up before a learned Single Judge of this Court, who, after having noticed the rival contentions, passed an order on 12.12.2019 in W.P.Nos.34153 and 33373 of 2019 as well as other connected petitions directing the Registry to obtain appropriate orders from the Chief Justice for being posted before the Division Bench.

3.This petition, in essence, is founded on the same propositions, but seeking a further relief of declaring the provisions of Section 47(1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, to be contravening the final pronouncements of this Court, reference whereof has been made in the pleadings of the present writ petition.

4.In the background aforesaid, it would be appropriate that the issue relating to the *vires* of the provisions aforesaid is also tested along with the said writ petitions and we, therefore, direct that this writ petition shall stand tagged with W.P.Nos.34153 and 33373 of 2019 and other connected writ petitions, which shall be placed before the appropriate Division Bench, for which orders may be obtained by the Registry on the administrative side.

(A.P.S., CJ.) (S.P., J.)

03.01.2020

W.P.No.35161 of 2019

Government of Tamil Nadu
2019

MANUSCRIPT SERIES

## FINANCE [Pension] DEPARTMENT
## G.O.Ms.No.393, Dated 20th December 2019.
(Vihari, Markazhi-4, ThiruvalluvarAandu-2050)

### ABSTRACT

**GRATUITY and G.P.F.** – Procedure for issue of Digitally signed E-Authorization to make payment of original Death-cum-Retirement Gratuity (DCRG) and General Provident Fund (GPF) final payment directly by the District Treasury Officers / Sub-Treasury Officers /Pay and Accounts Officers concerned – Orders – Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No.262, Finance (Pension) Department, Dated 31-07-2018.
2. From the Accountant General (A&E), Chennai-18 D.O. Lr.No.AG(A&E)/ Pen.30/ Unit4/ 2019-20/9026, Dated 06.05.2019.
3. Government Letter No.26243/Pension/ 2019, Finance Department, Dated 12-06-2019.
4. From the Principal Secretary/ Commissioner of the Treasuries and Accounts, Rc.No. 21538/E3/2019, Dated 09-07-2019.

### ORDER:

In the Government Order first read above, Government have issued new procedures for E-authorizations relating to all original pension/family pension and other retirement benefits to the Treasuries, Departments and Pensioners / Family Pensioner under the pilot scheme of Integrated Financial Management and Human Resources Management System [IFHRMS].

2. In the D.O. letter second read above, the Accountant General (A&E), Chennai has sent the proposal to revise the procedure for making payment of original Death-cum-Retirement Gratuity (DCRG) and General Provident Fund (GPF) final payment directly from the Treasuries /Pay and Accounts Office's by delinking the Drawing and Disbursing Officer's (DDOs) so as to enable the Accountant General to issue E-Authorization for all payments, thereby ensuring uniformity in issue of authorization and expeditious payment of retirement benefits to the beneficiaries.

3. In the Government letter third read above, the Principal Secretary / Commissioner of Treasuries and Accounts, Chennai has been requested to offer their remarks on the proposal of the Accountant General (A&E), Chennai. In the

letter fourth read above, the Principal Secretary /Commissioner of Treasuries and Accounts, Chennai has accepted the revised procedure as proposed by the Accountant General.

4. The Government after careful consideration has decided to accept the proposal of Accountant General (A&E), Chennai to issue E-authorizations for making payment of original Death-cum-Retirement Gratuity (DCRG) and General Provident Fund (GPF) final payment to the Treasuries / Pay and Accounts Office's delinking the Drawing and Disbursing Officers (DDOs). This will enable the Accountant General to issue E-Authorization for all payments, thereby ensuring uniformity in issue of authorization and expeditious payment of retirement benefits to the beneficiaries. Accordingly, the Government directs that the revised procedures as detailed in Annexure-I and Annexure-II shall be adopted.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. KRISHNAN**

**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் D.சாந்தி, செயற்பொறியாளர் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக ரூ.5000/- (ஐயாயிரம் மட்டும்) சென்னை கிளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் K.ரவி உதவிப்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1400/- (ஆயிரத்து நானூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

சென்னை பொறியியல் இல்லத்தில் மாத வாடகையில் (Monthly Rent) தங்குவதற்கு மாத வாடகை கட்டணமாக ரூபாய் 5000/- (ஐயாயிரம் மட்டும்) என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**- இல்லக்காப்பாளர்**

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

## 2020 ஆம் ஆண்டு ஓய்வு பெற உள்ள தலைமைப் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் உதவிச் செயற்பொறியாளர் அவர்களது பெயர் பட்டியல்

கடித எண். எஸ் 1(2) / 35542 / 2019 / நாள். 27.11.2019

| வ.எண். | திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவி | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| **ஜனவரி 2020** | | | | |
| 1. | C. நம்பிராஜன் | 22.01.1962 | க.பொ | கட்டட (க & ப) வட்டம், சேலம். |
| 2. | K. சுந்தரப்பன் | 20.01.1962 | செ.பொ | 18-ம் கால்வாய் நீட்டிப்பு, சிறப்பு திட்டக் கோட்டம், தேனி. |
| 3. | P. கருணாநிதி | 15.01.1962 | உ.செ.பொ | கட்டட (க & ப) கோட்டம், காஞ்சிபுரம். |
| 4. | K. சுந்தரராஜீ | 17.01.1962 | உ.செ.பொ (மின்) | தொழில்நுட்பக் கல்விக் கோட்டம் , சென்னை. |
| 5. | M. சுதாகர் | 01.02.1962 | உ.செ.பொ | கட்டட (க &ப ) கோட்டம், நாகர்கோவில். |
| 6. | R. குணசேகரன் | 08.01.1962 | த.வ.அ | கட்டட (க & ப) வட்டம், (ம.ப) சென்னை - 5. |
| 7. | P. சிதம்பரம் | 01.02.1962 | த.வ.அ | கட்டட (க & ப) வட்டம், (ம.ப) திருநெல்வேலி. |
| **பிப்ரவரி 2020** | | | | |
| 1. | V. சண்முகநாதன் | 09.02.1962 | சி.த.பொ | தலைமைப் பொறியாளர், இயக்குநர், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சி - 15. |
| 2. | K. சௌந்தரராஜன் | 01.03.1962 | து.க.பொ | கட்டட (க & ப) வட்டம், சேலம். |
| 3. | B. பாலசுப்பிரமணியன் | 10.02.1962 | க.பொ | கட்டட (க & ப) கோட்டம், (ம.ப), சிவகங்கை. |
| 4. | V. வேலையா | 15.02.1962 | செ.பொ | சிறப்பு திட்ட கோட்டம், நாங்குநேரி. |
| 5. | N.S. கௌரி சங்கர் | 20.02.1962 | உ.செ.பொ | கொஸ்தலையாறு வடிநில கோட்டம், திருவள்ளூர். |
| 6. | T. பன்னீர் செல்வம் | 15.02.1962 | த.வ.அ | கட்டட (க & ப) வட்டம், சேலம். |
| **மார்ச் 2020** | | | | |
| 1. | D. ஞானமூர்த்தி | 03.03.1962 | சி.த.பொ | கட்டட (க & ப) வட்டம், வேலூர் - 1. |
| 2. | A.N. விசாலாட்சி | 09.03.1962 | இ.த.பொ | த.பொ, நீஅது, பொபது, வடிவமைப்பு ஆராய்ச்சி (ம) கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை - 5. |
| 3. | S.R. ருக்மணி | 16.03.1962 | இ.த.க கலைஞர் | தலைமை கட்டடக் கலைஞர், பொபது சேப்பாக்கம், சென்னை - 5 |
| 4. | S. அப்பாஸ் மந்திரி | 21.03.1962 | க.பொ | பனிமனை மற்றும் பண்டகசாலை வட்டம், சென்னை - 5. |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | C. மோகன் | 20.03.1962 | க.பொ / இ | க.பொ / இயக்குநர், பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சி. |
| 6. | A. காளிமுத்து | 04.03.1962 | க.பொ | க.பொ / திட்ட இயக்குநர், மாநில திட்ட மேலாண்மை அலுகு (SMPU). |
| 7. | M. கருணாகரன் | 18.03.1962 | செ.பொ (த.ப.நீ) | கட்டட (க & ப) கோட்டம், திருச்சி |
| 8. | N. மாணிக்கராஜன் | 14.03.1962 | உ.செ.பொ(மி) | மின் கோட்டம், மதுரை. |
| 9. | V. பரமசிவம் | 06.03.1962 | உ.செ.பொ | மணிமுத்தாறு வடிநில கோட்டம், தேவகோட்டை. |
| 10. | S. கிருஷ்ணன் | 20.03.1962 | உ.செ.பொ | நிலநீர் கோட்டம், காரைக்குடி. |
| 11. | K. சுந்தர பாண்டி | 31.03.1962 | உ.செ.பொ | கட்டட (க) கோட்டம் - 2, (ம.ப) சென்னை - 5. |
| 12. | V. கிருஷ்ணமூர்த்தி | 31.03.1962 | த.வ.அ | பாலாறு வடிநில வட்டம், நீஆது, சென்னை - 5. |
| **ஏப்ரல் 2020** | | | | |
| 1. | V. சண்முகவேலு | 22.04.1962 | இ.த.பொ | தலைமைப் பொறியாளர், பொபது, நீஆது, இயக்கம் (ம) பராமரிப்பு, சென்னை - 5. |
| 2. | P.K. ரமணி | 24.04.1962 | க.பொ (அ) | இயக்குநர், சிப்காட், சென்னை. |
| 3. | R. பாண்டியராஜன் | 25.04.1962 | க.பொ | கட்டட (க & ப) வட்டம், ம.ப, பொபது, சென்னை. |
| 4. | A. தினகரன் | 30.04.1962 | க.பொ | நிலநீர் வட்டம், மதுரை. |
| 5. | S. பிரபாகரன் | 01.05.1962 | க.பொ / இ.இ | த.பொ (ம) இயக்குநர், பொபது, நீராய்வு நிறுவனம், நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு, நீஆது, சென்னை. |
| 6. | A. குமார் | 25.04.1962 | க.பொ | கட்டட (க & ப) வட்டம், கோயமுத்தூர். |
| 7. | S. ஜெயபாலன் | 08.04.1962 | க.பொ | கட்டட (க & ப) வட்டம், திருநெல்வேலி. |
| 8. | D. தர்மலிங்கம் | 05.04.1962 | க.பொ | நிலநீர் வட்டம், தஞ்சாவூர். |
| 9. | N.N. தியாகராஜன் | 19.04.1962 | செ.பொ | கீழ்பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம். |
| 10. | B. செந்தில்நாதன் | 14.04.1962 | க.பொ (அ) | தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை. |
| 11. | R. குணாநிதி | 01.05.1962 | உ.செ.பொ(மி) | மின் கோட்டம், விழுப்புரம். |
| 12. | M. சம்பத்குமார் | 21.04.1962 | உ.செ.பொ(மி) | செ.பொ / பொது கண்காணிப்பாளர், பனிமனை மற்றும் பண்டகசாலை கோட்டம், சென்னை - 1. |

| | | | |
|---|---|---|---|
| 13. S. குணசேகரன் | 06.04.1962 | உ.செ.பொ (தொநுநேஉ) | வைப்பாறு வடிநில கோட்டம், விருதுநகர். |
| 14. S. செல்வம் | 25.04.1962 | மி.பொ | மின் கோட்டம், பொபது, திருச்சி. |
| 15. N. கிரிஜா குமாரி | 20.04.1962 | த.வ.அ | மு.த.பொ (க), (ம) த.பொ (க), சென்னை மண்டலம், பொபது, சென்னை - 5. |
| **மே 2019** | | | |
| 1. M. கிருஷ்ணன் | 09.05.1962 | த.பொ | த.பொ, பொபது, நீ.ஆ.து, மதுரை மண்டலம், மதுரை. |
| 2. S. ஞானசேகரன் | 17.05.1962 | சி.த.பொ | கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை. |
| 3. T. ரவிந்தரபாபு | 12.05.1962 | சி.த.பொ | த.பொ, பொபது, நீ.ஆ.து, திட்ட உருவாக்கம், சென்னை. |
| 4. A. ஜெயகோபால் | 30.05.1962 | சி.த.பொ | மேல் காவிரி வடிநில வட்டம், சேலம். |
| 5. M. சுந்தராம்பாள் | 02.05.1962 | க.பொ (TNIAMP) | மு.த.பொ நீஆது, (ம) த.பொ (பொது) பொபது, சேப்பாக்கம், சென்னை - 5. |
| 6. R. பிரகாசம் | 07.05.1962 | க.பொ | கட்டட (க & ப) வட்டம், திருச்சி. |
| 7. K. ரவி மனோகர் | 14.05.1962 | க.பொ | வெள்ளாறு வடிநில வட்டம், நீஆது, கடலூர். |
| 8. S. சுரேஷ்குமார் | 10.05.1962 | க.பொ | த.பொ, மாநில நில (ம) மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், தரமணி, சென்னை-113. |
| 9. R. இளங்கோவன் | 20.05.1962 | செ.பொ | த.பொ, /இணைப்பேராசிரியர், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சி - 15. |
| 10. P. மணிவண்ணன் | 11.05.1962 | செ.பொ (அ.பணி) | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,நேரு பூங்கா,சென்னை.4 |
| 11. P. சரவணன் | 25.05.1962 | செ.பொ | அரியாறு வடிநிலக் கோட்டம், திருச்சி. |
| 12. T. சுப்ரமணியன் | 30.05.1962 | செ.பொ | பெரியாறு வைகை வடிநில கோட்டம், மதுரை. |
| 13. T. விஜயகுமார் | 28.05.1962 | செ.பொ | சிறப்பு திட்டக் கோட்டம், அம்பாசமுத்திரம். |
| 14. S. வெங்கடகிருஷ்ணன் | 15.05.1962 | செ.பொ | கீழ் வைகை வடிநில கோட்டம், பரமக்குடி. |
| 15. A. கணேசன் | 25.05.1962 | செ.பொ | கட்டட (க & ப) கோட்டம், விருதுநகர். |
| 16. Su. கங்காதரன் | 31.05.1962 | செ.பொ (த.ப.நீ) | கோரம்பள்ளம் வடிநிலக் கோட்டம், தூத்துக்குடி. |
| 17. R. பிரகாஷ் | 28.05.1962 | செ.பொ | திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம், சேலம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | S. சர்புதீன் | 05.05.1962 | செ.பொ | கட்டட (க & ப) கோட்டம், (ம.ப), மதுரை. |
| 19. | P.V. இராஜன் | 02.05.1962 | செ.பொ | கீழ்காவிரி வடிநில வட்டம், தஞ்சாவூர். |
| 20. | P. ஸ்ரீதர் | 24.05.1962 | செ.பொ | கட்டட (க & ப) கோட்டம், திருவள்ளூர். |
| 21. | R. பிரேமலதா | 08.05.1962 | செ.பொ | கட்டட (க & ப) கோட்டம், திண்டுக்கல் |
| 22. | K. சுகுமார் | 21.05.1962 | செ.பொ | த.பொ (ம) இயக்குநர், பொபது, நீராய்வு நிறுவனம், நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு, நீஆது, சென்னை. |
| 23. | T. வேல்முருகன் | 15.05.1962 | து.க.பொ | கட்டட (க & ப) வட்டம், (ம.ப), மதுரை. |
| 24. | J. சர்தார் அலி | 28.05.1962 | து.க.பொ | கட்டட (க & ப) வட்டம், திருச்சி. |
| 25. | A. சிவக்குமார் | 11.05.1962 | து.க.பொ | கட்டட (க & ப) வட்டம், சென்னை. |
| 26. | S. பால் பாண்டியன் | 30.05.1962 | து.க..பொ | கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை. |
| 27. | N.P. பாண்டியன் | 25.05.1962 | மு.ப.அ | மு.த.பொ நீஆது, (ம) த.பொ (பொது) பொபது, சேப்பாக்கம், சென்னை - 5. |
| 28. | V. இரவிச்சந்திரன் | 27.05.1962 | உ.செ.பொ | கட்டட (க & ப) கோட்டம், திருவண்ணாமலை. |
| 29. | U. நகுலன் | 25.05.1962 | உ.செ.பொ | கட்டட (க & ப) கோட்டம், கிருஷ்ணகிரி. |
| 30. | V. பிச்சைமுத்து | 15.05.1962 | உ.செ.பொ | சுரங்கவியல் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், திருச்சி. |
| 31. | S. அருள்மொழிகதிர் | 31.05.1962 | உ.செ.பொ | நில நீர் கோட்டம், திருச்சி. |
| 32. | T. குணசீலன் | 01.06.1962 | உ.செ.பொ | மேல்பாலாறு வடிநில கோட்டம், வேலூர். |
| 33. | S. முருகன் | 23.05.1962 | உ.செ.பொ | ஆரணியாறு வடிநில கோட்டம், நீஆது, சென்னை - 5. |
| 34. | S. லீலாவதி | 05.05.1962 | உ.செ.பொ | குண்டாறு வடிநில கோட்டம், மதுரை - 2. |
| 35. | K. இராமமூர்த்தி | 05.05.1962 | உ.செ.பொ | குண்டாறு வடிநில கோட்டம், மதுரை - 2. |
| 36. | S. இரத்தினசபாபதி | 29.05.1962 | த.வ.அ | கட்டட (க & ப) வட்டம், வேலூர். |
| 37. | R. பெருமாள் பிள்ளை | 28.05.1962 | த.வ.அ | தலைமைப் பொறியாளர் அலுவலகம், பொபது. தொழில்நுட்ப கல்வி வட்டம், சென்னை - 25. |
| 38. | C.S. யுகந்தரையா | 24.05.1962 | த.வ.அ | கட்டட (க & ப) வட்டம், சென்னை 5. |
| 39. | T. கரிகாலன் | 12.05.1962 | த.வ.அ | த.பொ, பொபது, நீஆது, கோயமுத்தூர் மண்டலம், கோயமுத்தூர். |

| | | | |
|---|---|---|---|
| **ஜூன் 2020** | | | |
| 1. M. இராஜமோகன் | 03.06.1962 | மு.த.பொ (கட்டடம்) | மு.த.பொ (க), (ம) த.பொ (க), சென்னை மண்டலம், பொபது, சென்னை - 5. |
| 2. P. சுகேந்திரன் | 01.07.1962 | செ.பொ | சுரங்கவியல் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், விழுப்புரம். |
| 3. K. மெய்யழகன் | 07.06.1962 | செ.பொ | மேல் பெண்ணையாறு வடிநில கோட்டம், நீஆது, தருமபுரி. |
| 4. V. சாம்ராஜ் | 24.06.1962 | செ.பொ | கொள்ளிடம் வடிநிலக் கோட்டம், நீஆது, சிதம்பரம். |
| 5. D. தட்சிணாமூர்த்தி | 28.06.1962 | செ.பொ | மருதையாறு வடிநிலக் கோட்டம், அரியலூர். |
| 6. S. ராஜா | 04.06.1962 | செ.பொ | நில நீர் கோட்டம், சென்னை. |
| 7. P. பிரபாகர் | 10.06.1962 | செ.பொ (அ.பணி) | கண்காணிப்பு (ம) ஊழல் தடுப்பு இயக்ககம், சென்னை - 16. |
| 8. V. ஆசைதம்பி | 07.06.1962 | செ.பொ | காவிரி வடிநிலக் கோட்டம், (கிழக்கு) மயிலாடுதுறை. |
| 9. M. ஜானகி | 01.07.1962 | து.க.பொ | மேல் காவிரி வடிநில வட்டம், சேலம். |
| 10. N. திருநாவுக்கரசு | 09.06.1962 | உ.செ.பொ(மி) | மின் கோட்டம், மதுரை. |
| 11. P. ஜான்பாட்ஷா | 03.06.1962 | உ.செ.பொ | சோலையார் வடிநிலக் கோட்டம், நீஆது, வால்பாறை. |
| 12. S. கல்யாணசுந்தரம் | 09.06.1962 | உ.செ.பொ | சுரங்கம் (ம) கண்காணிப்பு கோட்டம், தஞ்சாவூர். |
| 13. S. ஆறுமுகம் | 11.06.1962 | உ.செ.பொ | நிலநீர் கோட்டம், திருநெல்வேலி. |
| 14. G. சிவராமகிருஷ்ணன் | 18.06.1962 | உ.செ.பொ | கீழ் வைகை வடிநில கோட்டம், பரமக்குடி. |
| 15. T.N. காசிவிஸ்வநாதன் | 06.06.1962 | த.வ.அ | தலைமைப் பொறியாளர் (கட்டடம்), திருச்சி மண்டலம், திருச்சி. |
| 16. A. அறிவுச்செல்வி | 02.06.1962 | த.வ.அ | கட்டட (க & ப) (ம.ப) வட்டம், திருச்சி - 1. |
| **ஜூலை 2020** | | | |
| 1. N.வெங்கடராமகிருஷ்ணன் | 29.07.1962 | செ.பொ உறுப்பினர்/ செயலாளர் | காவிரி தொழில் நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர் பிரிவு, எழும்பூர். |
| 2. M. சுகுமார் | 25.07.1962 | க.பொ | பெரியாறு வைகை வடிநில வட்டம், மதுரை. |
| 3. R. திருவேட்டை செல்லம் | 04.07.1962 | க.பொ | நடுக் காவிரி வடிநில வட்டம், திருச்சி. |
| 4. T.B. திருமூர்த்தி | 12.07.1962 | செ.பொ | கட்டட (கட்டுமானம்) கோட்டம் - 1, (ம.ப), சென்னை - 5. |

| | | | |
|---|---|---|---|
| 5. M. முத்தமிழ் செல்வி | 24.07.1962 | செ.பொ | திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம், காரைக்குடி. |
| 6. K. தங்கராஜ் | 10.07.1962 | செ.பொ | திட்ட மேலாண்மை அலகு - III, திருத்துறைப்பூண்டி. |
| 7. T. ஞானம்பாள் | 29.07.1962 | து.க.பொ | சுற்றுச்சூழல் குழும வட்டம், திருச்சி. |
| 8. M. ஹரிஹரன் | 22.07.1962 | உ.செ.பொ(மி) | மின் கோட்டம், கோயமுத்தூர். |
| **ஆகஸ்ட் 2020** | | | |
| 1. K. தேவதயா | 19.08.1962 | த.வ.அ | வெள்ளாறு வடிநில வட்டம், நீஆது, கடலூர். |
| **செப்டம்பர் 2020** | | | |
| 1. S. பொன்னழகி | 07.09.1962 | உ.செ.பொ | இயக்குநர் அலுவலகம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், (கட்டுமானப்பிரிவு), சென்னை-25. |
| 2. M. பஞ்சவர்ணம் | 23.09.1962 | உ.செ.பொ | மணிமுத்தாறு வடிநில கோட்டம், தேவகோட்டை. |
| 3. P. செல்வி | 07.09.1962 | த.வ.அ | திட்டம் மற்றும் வடிவமைப்ப வட்டம், (கட்டடம்), சென்னை. |
| **அக்டோபர் 2020** | | | |
| 1. K. தேன்மொழி | 10.10.1962 | து.க.பொ | பெரியாறு வைகை வடிநில வட்டம், மதுரை. |
| 2. S. நடராஜரத்தினம் | 16.10.1962 | உ.செ.பொ | கட்டட (க & ப) கோட்டம், (ம.ப) மதுரை. |
| 3. S. பிச்சைமுருகன் | 17.10.1962 | உ.செ.பொ | துணை பதிவு துறை தலைவர், அலுவலகம், மதுரை. (On Duty) |
| 4. T.S. இராமசுப்பிரமணியன் | 15.10.1962 | உ.செ.பொ(மி) | மின் கோட்டம் - 2, சென்னை - 5 |
| 5. R.K.R. இராஜசேகர் | 13.10.1962 | உ.செ.பொ (த.ப.நீ) | கட்டட (க & ப) வட்டம், சென்னை. |
| **நவம்பர் 2020** | | | |
| ---------------ஒருவருமில்லை--------------- | | | |
| **டிசம்பர் 2020** | | | |
| 1. M. வாசுதேவன் | 02.12.1962 | செ.பொ | கட்டட (கட்டுமானம்) கோட்டம், III, (ம.ப), சென்னை - 5. |

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் முன்னாள் பொருளாளர் பொறியாளர் எஸ்.கந்தசாமி உதவிப்பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமணத்தை முன்னிட்டு ரூ.5000/- (ஐயாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 662 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 31.12.2019)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | R. செல்வகுமார் | தலைமைப் பொறியாளர் |
| 2. | P. ராஜேந்திரன் | கண்காணிப்புப் பொறியாளர் / இயக்குநர் |
| 3. | N. கணேசன் | செயற்பொறியாளர் |
| 4. | K.M. சண்முகம் | உதவி செயற்பொறியாளர் |
| 5. | K. தவமணி | உதவி செயற்பொறியாளர் |
| 6. | S. விஜயலட்சுமி | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 7. | A. சாரதா | தலைமை வரைதொழில் அலுவலர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2019 /நாள் 29.11.2019ன் படி 30.11.2019 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | C. மோகன் | 01.12.1961 | உதவிப் பொறியாளர் |
| 2. | B. வாசுகி | 27.11.1961 | இளநிலைப் பொறியாளர் |

**ஒம்/- கு.இராமமூர்த்தி**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம),**
**தலைமைப் பொறியாளர் (பொது), பொபது**

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் R.K.சண்முகா, உதவிப்பொறியாளர் அவர்களின் சகோதரர் திரு. R.தேவராஜ் அவர்கள் 25.12.2019 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் P.V.ராஜன் செயற்பொறியாளர் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ.3500/- (மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கியுள்ளார்.



## விடைபெறுகிறேன் நண்பர்களே!

பெ.தமிழ்செல்வம்
உதவிசெயற்பொறியாளர்,பொபது,நீஆது (ஓய்வு)
எண். 20/1, விநாயகர் தெரு,
அழகப்பாபுரம், காரைக்குடி - 630 003.
செல்: 94435 02100.

நூற்றாண்டு விழா கண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் அனைத்து பொறியாள சகோதர சகோதரிகளுக்கும் வணக்கம்.

1981ம் ஆண்டு காரைக்குடி அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியில் எனது பட்டயப் படிப்பை முடித்து 25.06.1984ல் RLEGP உபகோட்டம் திருவாடானையில் தொழில்நுட்ப உதவியாளராக பணியில் சேர்ந்தேன். அதன் பின் கமுதி மற்றும் R.S.மங்கலம் ஆகிய ஊர்களில் பணியாற்றி 25.07.1997ல் இளம் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்று கீழ் வைகை வடிநில உபகோட்டம், மானமதுரையில் பணியேற்றேன். அதன் தொடர்ச்சியாக நாட்டரசன்கோட்டை, கண்டனூர், திருவாடானை, இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் பணியாற்றினேன்.

அதன் பின் 2014ம் ஆண்டு மார்ச் மாதம்5ம் தேதி உதவிசெயற்பொறியாளராகப் பதவி உயர்வு பெற்று பெரியாறு அணை சிறப்புக் கோட்டம் கம்பத்தில் பணியேற்று, முல்லைப் பெரியாறு அணையில் பணியாற்றும் வாய்ப்பை பெற்றேன். அதைத்தொடர்ந்து பெரியாறு மேம்பாட்டு உபகோட்டம் நிலக்கோட்டையிலும், இறுதியாக 01.02.2016 முதல் 18ம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு உபகோட்டம் தேவாரத்திலும் பணிசெய்து 30.11.2019 அன்று எனது பணியை இனிதே நிறைவு செய்து அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

150 ஆண்டுகள் பாரம்பரியமிக்க பொதுப்பணித்துறையில் என்னை அன்புடன் வழி நடத்திய மூத்த பொறியாளர்களுக்கும் என்னுடன் இணைந்து பணியாற்றிய பொறியாளர்கள் மற்றும் அலுவலக நண்பர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையையும் நன்றி கலந்த வணக்கத்தையும் காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

நமது தமிழ்நாடு பொறியியல் சங்கத்தில் 1986ல் உறுப்பினராகச் சேர்ந்து இணைச்செயலாளர் மற்றும் கிளைச்செயலாளர் பொறுப்புகளில் பணி செய்து பின் 2018-19ம் ஆண்டுக்கான மைய மண்டலச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு, மையச்சங்க பொறுப்பாளராகப் பணியாற்ற எனக்கு கிடைத்த வாய்ப்பை வரமாகக் கருதி பணியாற்றினேன். தற்பொது 2019-20ம் ஆண்டுக்கான தேனி கியையின் துணைத்தலைவராக தேர்வு செய்யப்பட்டு எனது பணியை நிறைவு செய்வதில் பெருமையடைகிறேன்.

இத்தனை காலம் என்னிடம் அன்பாகப் பழகி ஆதரவு நல்கிய நமது சகோதரப் பொறியாளர்களுக்கும், பொறியாள சகோதரிகளுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும் நன்றி கலந்த வணக்கத்தையும் மீண்டும் ஒருமுறை காணிக்கையாக்கி மன நிறைவுடன் விடைபெறுகிறேன் நண்பர்களே.

நன்றி வணக்கம்...

என்றும் அன்புடன்
பெ.தமிழ்செல்வம்

# இயங்கும் உலகம்

## சென்னை கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் புத்தாண்டு சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் 04.01.2020 அன்று சேப்பாக்கம், பொறியியல் இல்லம் சி.ப.சண்முகம் அரங்கத்தில் நடைபெற்றது.

சென்னை கிளை தலைவர் பொறியாளர் எஸ். சண்முகானந்தன் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்க பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்ள தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே தொடங்கியது.

கூட்டத்திற்கு அனைத்து மையச்சங்க பொறுப்பாளர்களும், மூத்த பொறியாளர்களும், சென்னை கிளை உறுப்பினர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டார்கள்.

சென்னை கிளை தலைவர் உரையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். மையச்சங்கம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். கிளைச் செயலாளர் பொறியாளர் ச.பார்த்தசாரதி அவர்கள் கிளை நடவடிக்கை குறித்து விவரித்தார்.

பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக உரையாற்றினார்கள்.

கிளைச் செயலாளர் பொறியாளர் ச.பார்த்தசாரதி அவர்கள் அவர்கள் கிளை நிதி நிலை அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

2020-ஆம் ஆண்டிற்கான நாட்சுவடியினை மூத்த பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்கள் வெளியிட பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் பெற்றுக் கொண்டார். நாட்காட்டியினை மூத்த பொறியாளர் ஆர்.வெங்கடசுப்பு அவர்கள் வெளியிட அமைப்பு மற்றும் சட்ட செயலாளர் எஸ். சண்முகானந்தன் பெற்றுக் கொண்டார். தினசரி நாட்காட்டியினை மூத்தப் பொறியாளர் தி.ப.பாலசுப்ரமணியன் அவர்கள் வெளியிட நிதிச்செயலாளர் பொறியாளர் ச.பார்த்தசாரதி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மூத்த பொறியாளர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

உறுப்பினர்கள் அனைவருக்கும் 2020-ஆம் ஆண்டிற்கான நாட்சுவடி மற்றும் நாட்காட்டி வழங்கப்பட்டது.

கிளை துணைத்தலைவர் பொறியாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் அவர்களின் நன்றியுரைக்குப்பின் மதியம் அறுசுவை உணவுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

Om Vinayaga

Om Namo Narayana

# *Wedding Invitation*

**Er. K. Vellimalai**

Assistant Executive Engineer, PWD, (Rtd.)

**&**

**Mrs. V. Amaithy Vellimalai**

cordially solicit your gracious presence and blessings with family and friends on the auspicious occasion of the Wedding of their son

**Er.V. Vignesh, BE., M..Tech., (Aero)**

(Senior Finite Element Analyst, UCAM Ltd., Banglore)

**with**

**Er.A. Swathi, B.E.,**

(Software Analyst, Capgemini Technology Services India Ltd., Bangalore)

D/o. (Late) **Mr.P. Arumugam** (Post Master) -

(Late) **Mrs.A. Poongothai, Mrs.A. Banumathi,** Usilangulam, Pudukkottai

On Friday, the 07th, February 2020,

between 9.00 a.m and 10.00 a.m.

at

**Maharaj Mahal,**

**Sathiyamoorthy Nagar, Pudukkottai.**

**Er. K. Vellimalai**

Assistant Execurive Engineer, PWD, (Ret).

No. 73/36, Gandhi Nagar 1st Street,

Pudukkottai - 622 001.

Cell: **94421 25532**

With Best Complements from: Relatives & Friends

---

Bus Route: **Pudukkottai to Alangudi & Aranthangi**

Bus Stop: **Perangulam** Bus No: **3, 18, 18A, 21**

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ விகாரி வருடம், தை மாதம் 24 -ம் தேதி **(07.02.2020) வெள்ளிக்கிழமை** புனர்பூச நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 06.00 மணிக்குமேல் 07.30 மணிக்குள் மகர லக்னத்தில்

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை, அன்னை மரியாள் நகர் தெய்வத்திருவாளர்கள் K.பெருமாள் தேவர் - P.மயிலாம்பாள் இவர்களின் மகன்வழிப் பேத்தியும், மயிலாடுதுறை, பனந்தோப்புத்தெரு தெய்வத்திரு. S.R.மகாலிங்கம் Ex Army - நலமுடன் M.மாரியம்மாள் ஆகியோரின் மகள்வழிப் பேத்தியும், தெய்வத்திரு.M.பாலாஜி அவர்களின் சகோதரியும், திரு.P.மாரிச்செல்வன் - திருமதிM.வள்ளி இவர்களின் குமாரத்தியுமான திருவளர்ச்செல்வி

## M. அனுஸ்ரீ, B.Tech.,

திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலுக்கா, எரவாஞ்சேரி தெய்வத்திரு K.கோவிந்தன் - நலமுடன் G.பாஞ்சாலி ஆகியோரின் மகன்வழிப் பேரனும், நாகப்பட்டினம், கல்லுக்காரத்தெரு தெய்வத்திரு. R.தனகோபால் - நலமுடன் T.ஆரஞ்சு அம்மாள் ஆகியோரின் மகள் வழிப் பேரனும், திரு.G.செல்வராஜ் - திருமதி S.பாண்டியம்மாள் இவர்களின் குமாரனுமான திருவளர்ச்செல்வன்

## S.முகேஷ், B.E., G.M.E., Marine Engineer

**(Synergy Marine Group, Chennai)**

இவர்களுக்கு திருமணம் செய்வதாய் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, நாகை மாவட்டம், சிக்கல், **ஸ்ரீ சிங்காரவேலவர் ஆலயத்தில்** நடைபெறும் திருமணத்திற்கும், அதனை தொடர்ந்து நாகப்பட்டினம், மேலக்கோட்டைவாசல் ரோடு, **V.P.N. திருமண மஹாலில்** (பைகாரா E.B. ஆபிஸ் எதிரில்) நடைபெறும் சகல வைபவங்களுக்கும் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.



**மணமகள் இல்ல வரவேற்பு:**
09.02.2020, ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணிக்குமேல்
தஞ்சாவூர், புதுக்கோட்டை சாலை,
**PL.A. சிதம்பரம் மஹாலில்**
நடைபெறும்

தங்கள் அன்புள்ள,

**P.மாரிச்செல்வன்,** M.E.,
உதவிப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
தஞ்சாவூர்.
துணைத்தலைவர்,TNEA,தஞ்சாவூர் கிளை
**M.வள்ளி** B.S.C.,
சகோதரர் தெய்வத்திரு.**M.பாலாஜி**
அன்னை மரியாள் நகர்,
மாதாக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்.
செல்: 99444 16803.

-உ-

Sri Murugan Thunai

# *Wedding Invitation*

**Er. S. Kandasamy, Assistant Engineer, PWD, Trichy,**
**Mrs. K. Anbuselvi, Accounts Assistant, S.Rly, GOC, Trichy,**
(2-A, Swaati Surya Apartment, 5th Cross, Ponnagar, Trichy - 620 001)

Request the pleasure of your company with family and friends
On the occasion of the Marriage of our Daughter

**Sow. S.K.Shanmuga Priya, B.Tech.,**
AAO, LIC - Mysore, Karnataka

**with**

**Chi.M.Baranidharan, B.E.,**
Officer, Canara Bank - Ralchur, Karnataka

S/o.**Mr.N.Muruganandam,** PE (FB), BHEL, Trichy - **Mrs.M.Vennila**
(Plot No: 9-A, 3rd Street, Gandhi Salai, Kailash Nagar, Trichy - 620 019)

On 27th, January 2020
at **SMR Mahal,**

(Formerly Alankar Cinema Theatre, Trichy - Thanjai Main Road),
Ariyamangalam, Trichy - 10.

**Muhurtham: Between 6.00 am to 7.30 am on 27.01.2020, Monday,**
**Lagnam: Magaram**

**Reception:** On 26.01.2020, Sunday from 6.30 pm to 9.00 pm
at **SMR Mahal,** Ariyamangalam, Trichy - 10.

**Er. S. Kandasamy, D.C.E., B.E., M.Tech (Struct).,**
Assistant Engineer, PWD, Trichy.
Cell: 94422 74774, 98429 74774.



With Best Complements from :
S.K.Janani Priya, MBBS,
Relatives & Friends



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் பொதுக்குழு கூட்டத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான தினசரி நாட்காட்டியை முன்னாள் பொதுச்செயலாளர் டி.பி.பாலசுப்ரமணியம் அவர்கள் வெளியிட நிதிச்செயலாளர் ச.பார்த்தசாரதி அவர்கள் பெற்றுக் கொண்டார்.




தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் கே.தவமணி உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு மையச்சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

JANUARY 2020

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் என்.கணேசன் செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளை பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Posted on
11.01.2020

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,